## டிசம்பர் – 24 – திங்கள்

**உமது பேரன்பு என்றென்றும் நிலைத்துள்ளது என்று அறிவிப்பேன்: திபா. 89:2**

---

**முதல் வாசகம் : 2 சாமுவேல் 7:1 – 5,8–12,14,16**

அரசர் தம் அரண்மனையில் குடியேறியபின், சுற்றிலிருந்த எல்லா எதிரிகளின் தொல்லையினின்றும் ஆண்டவர் அவருக்கு ஓய்வு அளித்தார். அப்போது இறைவாக்கினர் நாத்தானைத் தாவீது அழைத்து, "பாரும் நான் கேதுரு மரங்களாலான அரண்மனையில் நான் வாழ்கிறேன். கடவுளின் பேழையோ கூடாரத்தில் குடியிருக்கிறது" என்று கூறினார். அதற்கு நாத்தான் நீர் விரும்பிய அனைத்தையும் செய்துவிடும் ஏனெனில் ஆண்டவர் உன்னோடு இருக்கிறார் என்று அரசனிடம் சொன்னார். அன்று இரவே ஆண்டவரின் வார்த்தை நாத்தானுக்கு அருளப்பட்டது. நீ சென்று, என் ஊழியன் தாவீதிடம் ஆண்டவர் இவ்வாறு கூறுவதாகச் சொல் நான் தங்குவதற்காக எனக்கு ஒரு கோவில் கட்டப்போகிறாயா?

எனது ஊழியன் தாவீதிடம் படைகளின் ஆண்டவர் இவ்வாறு கூறுவதாகச் சொல் என் மக்கள் இஸ்ரயேலின் தலைவனாக விளங்க புல்வெளியில் ஆடுமேய்த்துக் கொண்டிருந்த உன்னை நான் அழைத்தேன். நீ சென்றவிடமெல்லாம் நான் உன்னோடு இருந்தேன் உன் கண்முன் உன் எதிரிகள் அனைவரையும் அழித்தேன் மேலும் உலகில் வாழும் பெரும் மனிதர் போல் நீ புகழுறச் செய்தேன். எனது மக்களாகிய இஸ்ரயேலுக்கு ஓர் இடத்தை அளிப்பேன். அவர்கள் அந்த இடத்திலேயே வாழ வைப்பேன். என் மக்களாகிய இஸ்ரயேல் மீது நீதித் தலைவர்களை ஏற்படுத்திய நாள்களாகிய தொடக்ககாலத்தில் தீயவர்களால் அவர்கள் ஒடுக்கப்பட்டது போல இனியும் அவர்கள் அலைக்கழிக்கப்பட மாட்டார்கள். அனைவரின் தொல்லை களினின்றும் உனக்கு நான் ஓய்வு அளிப்பேன். மேலும் ஆண்டவர் தாமே உன் வீட்டைக் கட்டப்போவதாக அவர் உனக்கு அறிவிக்கிறார். உன் வாழ்நாள் நிறைவுபெற்று நீ உன் மூதாதையரோடு துயில்கொள்ளும் போது, உனக்கு பிறக்கும் உன் வழித்தோன்றலை உனக்குப் பின் நான் உயர்த்தி அவனது அரசை நான் நிலைநாட்டுவேன். நான் அவனுக்கு தந்தையாக இருப்பேன். அவன் எனக்கு மகனாக இருப்பான். அவன் தவறுசெய்யும்போது மனித இயல்புக்கேற்ப அடித்து, மனிதருக்கே உரிய துன்பங்களைத் தருவேன். என் முன்பாக உனது குடும்பமும் உனது அரசும் என்றும் உறுதியாயிருக்கும்! உனது அரியணை என்றுமே நிலைத்திருக்கும்!

**பதில்பாடல் :** ஆண்டவரின் பேரன்பை நான் என்றென்றும் பாடுவேன்.

**நற்செய்தி : லூக்கா 1 : 67 – 79**

அக்காலத்தில் திருமுழுக்கு யோவானின் தந்தை செக்கரியா தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு உரைத்த இறைவாக்கு : "இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரைப் போற்றுவோம். ஏனெனில் அவர் தம் மக்களைத் தேடிவந்து விடுவித்தருளினார். தம் தூய இறைவாக்கினர் வாயினால் தொடக்க முதல் அவர் மொழிந்தபடியே அவர் தம் ஊழியராகிய தாவீதின் குடும்பத்தில் வல்லமை உடைய மீட்பர் ஒருவர் நமக்காகத் தோன்றச் செய்தார். நம் பகைவரிடமிருந்தும் நம்மை வெறுப்போர் அனைவரின் பிடியிலிருந்தும் நம்மை மீட்பார். அவர் நம் மூதாதையருக்கு இரக்கம் காட்டி, தமது தூய உடன்படிக்கையையும், நம் தந்தையாகிய ஆபிரகாமுக்கு அவர் இட்ட ஆணையையும் நிறைவேற்ற நினைவு கூர்ந்தார். இவ்வாறு நாம் பகைவரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுத் தூய்மையோடும் நேர்மையோடும் வாழ்நாளெல்லாம் அச்சமின்றி அவர் திருமுன் பணிசெய்யுமாறு வழிவகுத்தார். குழந்தாய், நீ உன்னத கடவுளின் இறைவாக்கினர் எனப்படுவாய். ஏனெனில் பாவ மன்னிப்பால் வரும் மீட்பை அவர்தம் மக்களுக்கு அறிவித்து ஆண்டவருக்கான வழியைச் செம்மைப்படுத்த அவர் முன்னே செல்வாய். இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு ஒளிதரவும், நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது."

**தியானம்:** கிறிஸ்துவின் பிறப்பின் முன்னைய நாளாகிய இன்று எமக்கு சந்தோஸம் நிறைந்த , இன்பம் நிறைந்த நாளாக இருக்கின்றது. ஏனெனில் இறைமகன் இயேசு எமது வாழ்க்கைக்கு ஒளிவிளக்காய் வந்து எங்களை மிளிரச் செய்வார். இவ்வொளியாகி இயேசு எம் உள்ளத்தில் வந்து தங்க நாங்கள் எந்த அளவில் தயாராக இருக்கின்றோம். பலவகையான உடுப்புக்கள், பலதரப்பட்ட நகைகள், அத்துடன் மதுபானங்கள் வேறு. கடவுள் தன் மகனை இவ்வுலகிற்கு அனுப்பிய நாங்கள் சந்தோஸமான நாள் என்று சொல்லிக்கொண்டு இவ்வாறான வாழ்க்கை வாழ்வதற்காக அல்ல. மாறாக எமது கறைபடிந்த வாழ்வை, இருள் நிறைந்த வாழ்வை நீக்கி ஒளியேற்றவே அனுப்பினார். அவரும் எமக்கு என்னென்ன தேவைகளோ அவற்றை கொடுத்த எம்மை நேர்வழியில் நடத்தி நிலையான நிடத்தில் தங்கவைத்துள்ளார். இன்றைய முதல் வாசகத்தில் ஆண்டவர் நாத்தான் மூலமாக இஸ்ராயேல் மக்களை அழைத்து வந்த நாள்முதல் இற்றைவரை நான் நிலையான இடத்தில் தங்கவில்லை. நான் என்றும் அவர்கள் கூடவே இருந்து பாதுகாத்து வந்தேன். அனைவருக்கும் அரசானாக ஆடு மேய்த்துக் கொண்டிருந்த உன்னை நான் தெரிந்தெடுத்து ஆசீர்வதித்தேன். என்றும் உன் கூடவே நான் இருந்து வழி நடத்துவேன் என்று தெரிக்கிறார். எங்களையும் அழைத்தவர் எவ்வாறான சூழ்நிலையிலும் எங்கள் கூடவே அவர் இருந்து வழிநடத்துகிறார். நாங்கள் அதை கண்டுணர முடியாமல் வாழ்கின்றோம். இயேசுவைக் கண்டுகொள்ள வேண்டுமானால் எமது வாழ்வை செபவாழ்வாக மாற்றவேண்டும், அப்போது எங்கள் மத்தியில் இருந்து அவர் பேசுவார். "எங்கே என் பெயரால் இருவர் அல்லது மூவர் ஒன்று கூடி இருப்பீர்களோ அவர்கள் மதியில் நான் இருக்கின்றேன் என்று இயேசு கூறுகிறார். எனவே கிறிஸ்துவின் பிறப்பு நாள் இன்பமான நாள் ஆனால் அதைவைத்துக் கொண்டு தேவையற்ற கூடாத செயல்களுக்கு அந்நாளைப் பயன் படுத்தாமல் ஒளியின் நாள், மகிழ்ச்சியின் நாள், பகிர்தலின் நாள், உறவின் நாள் என்று உணர்ந்து ஒளியாம் இறையே வாராய் எளிலாம் நெஞ்சம் தனிலே, எளிலாம் இறையே வாராய் என்று இயேசுவை வரவேற்போம்